முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1188

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.12.2022, வெள்ளிக்கிழமை

1. அறமெனும் வேலியாய் உலகினில் மாற்றம்
அன்னதானம் கொண்டு அற்புதமாய் நடத்துகின்ற
வரம்பெற்ற எந்தன் அவதார ஞானியே
வள்ளலே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரமென சுபகிருது சிலை திங்கள்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 15 ம் நாள் 30.12.2022, வெள்ளிக்கிழமை)
வல்லமை கூடிட எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் தொண்டர்படையே
உலகத்தை மாற்றும் மகா சக்தியாகும்
குறைத்து அரங்கன் சக்தியையோ தொண்டர்களையோ
குவலயத்தில் காணும் மக்கள் எல்லாம்
4. மக்களெல்லாம் ஏமாற்றம் கண்டு இந்த உலகிலே
மரணம் வழி தொடர்ந்து தழுவி பலபிறவி தன்னை
தன்னையே அடைந்து அவர்களெல்லாம்
தகுதி இழந்து வாட நேரும்
5. மண்ணுலகில் இந்த அவதார ஞானி அரங்கன் மகத்துவத்தை
மனமுவந்து ஏற்று சரணாகதி கொண்டு
அண்ணலே என வணங்கி ஏற்று அன்னதானத்தில் பொருளுதவி செய்து
அரங்கனின் சன்மார்க்கத்தை உயிரென ஏற்றால்
6. ஏற்றவர்களெல்லாம் எந்த வினையில் இருந்தாலும்
இடர்கள் அத்தனையும் அகன்றோடி இனிதே
மாற்றம் அரங்கன் மூலம் கண்டு
மரணத்தை வென்று மண்ணுலகில் ஞானிகளாகவே
7. ஆகவே ஆற்றல் கூடி
அரங்கன் அவதார நோக்கத்தில்
அற்புதமாக அனைவருமே இடம்பெற்று
ஆற்றல்மிக்க ஞான யுகம் ஞான ஆட்சிக்காலம்
8. ஞானிகளுடைய முழுமையான தயவும்
ஞானசித்தர் காலத்தில் வாழும் வாய்ப்பும் கூடி
ஐயமற உலகோர் சிறப்பர்
அற்புதத்தை அரங்கனைகொண்டு ஆறுமுகன் யான் நடத்துவேன்

ஞான அறிவுரை ஆசி விளக்கம் முற்றே

–சுபம்–